<u>சார்பு நீதிமன்றம் – திருச்செங்கோடு</u>
முன்னிலை. திரு. D.மோகன்குமார், B.Com.,M.L.,
சார்பு நீதிபதி, திருச்செங்கோடு
2024–ம் ஆண்டு மார்ச் திங்கள் 21–ம் நாள் வியாழக்கிழமை
<u>EA No.189/2017 in REP No.36/2013 in OS No.195/2008</u>

01. பாவாயி
02. கே.மல்லிகா ... மனுதாரர்கள்/கிளைம்தாரர்கள்

/எதிராக/

01. எஸ்.சுந்தராஜ் ...1–ம் எதிர்மனுதாரர்/டிகிரி பெற்றவர்

02. சி.ராஜவேலு ...2–ம் எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி

இம்மனு என் முன்னர் 19–03–2024–ம் தேதியன்று இறுதியான விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்கள்/கிளைம்தாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.முனிராஜ், அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதாரர்கள்/டிகிரி பெற்றவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பழனிவேலு, அவர்கள் ஆஜராகியும், 2–ம் எதிர்மனுதாரர்கள்/தீர்ப்புக் கடனாளி அழைத்தும் அஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், மற்றும் இருதரப்பிலும் முன்னிடப்பட்ட வாதுரை மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உ த் த ர வு</u>

இம்மனுவானது மனு 1–வது அயிட்டச் சொத்தில் 1–ம் கிளைம்தாரருக்கு உள்ள 1/9 பங்கையும், 1–ம் கிளைம்தாரருக்கு 2–ம் அயிட்டச் சொத்தில் குறிப்பாக 4751 சதுரடியில் உள்ள 1/3 பங்கையும், அதேபோல் மனு 1–வது அயிட்டச் சொத்தில் 2–ம் கிளைம்தாரருக்கு உள்ள 4/9 பங்கையும், 2–ம் கிளைம்தாரருக்கு 2–வது அயிட்டச் சொத்தில் குறிப்பாக 4751 சதுரடியில் உள்ள 1/3 பங்கையும் 1–ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி நிறைவேற்று மனுவிலிருந்து நீக்கரவு செய்து உத்தரவிடக் கோரியும் மற்றும் செலவு தொகை கோரியும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 58 மற்றும் பிரிவு 151–ன்படி தாக்கல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்</u>

(i) மனுச் சொத்தானது பாதரை கிராமத்தில் உள்ள பொதுக் குடும்ப சொத்திலிருந்து வந்த தொகையைக் கொண்டும், பொது குடும்ப வருமானத்திலிருந்தும் 2–ம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக்

கடனாளி பேரில் கடந்த 14–06–1989–ம் வருடம் கிரையம் பெறப்பட்ட சொத்தாகும். மனு 1–ம் அயிட்டச் சொத்து 2–ம் எதிர்மனுதாரர் பெயரில் கிரையம் பெறப்பட்டிருப்பினும், மேற்படி சொத்து கிளைம்தாரர்கள் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரின் கூட்டுக் குடும்ப சொத்தாகும். மேற்படி மனு 1–ம் அயிட்டச் சொத்துக்களில் 1–ம் மனுதாரர்/1–ம் கிளைம்தாரரின் தகப்பனாருமான லேட்.சின்னுசாமிக்கு 1/3 பங்கும், 2–ம் மனுதாரர்/2–ம் கிளைம்தாரருக்கு 1/3 பங்கும், 2–ம் எதிர்மனுதாரருக்கு 1/3 பங்கும் பாத்தியம். மேற்படி மனு 1–ம் அயிட்டச் சொத்திலிருந்த 1/3 பங்கு பாத்தியத்தை விட்டு சின்னுசாமி இறந்துவிட்டார். மேற்படியார் இறந்தபின்னிட்டு தற்போது மனு 1–ம் அயிட்டச் சொத்தில் 1–ம் மனுதாரர்/1–ம் கிளைம்தாரருக்கு 1/9 பங்கும், 2–ம் மனுதாரர்/2–ம் கிளைம்தாரருக்கு 4/9 பங்கும், 2–ம் எதிர்மனுதாரருக்கு 4/9 பங்கும் பாத்தியம் சித்தித்துள்ளது. மேற்படி வீதம் பாத்திமுள்ள 1–ம் அயிட்டச் சொத்தானது கிளைம்தாரர்கள் மற்றும் 2/–ம் எதிர்மனுதாரர்களின் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருகிறது.

(ii) 2–ம் அயிட்டச் சொத்து 2–ம் மனுதாரர்/கிளைம்தாரர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரான லேட்.சின்னுசாமிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டிருந்த சொத்தாகும். லேட்.சின்னுசாமியும், 2–ம் எதிர்மனுதாரரும் கடந்த 14–05–2001–ம் தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். பாகப்பிரிவினைக்கு முன்பே 2–ம் மனுதாரர்/2–ம் கிளைம்தாரருக்கு 1989–ம் வருடத்திற்கு முன்பே திருமணமாகவிட்டதால் மேற்படி லேட்.சின்னுசாமியும், 2–ம் எதிர்மனுதாரர் மட்டுமே கூட்டுக் குடும்ப பாத்தியஸ்தர்கள் (Coparceners). 2–ம் கிளைம்தாரருக்கு 2–ம் அயிட்டச் சொத்தில் பாகப்பிரிவினை காலகட்டத்தில் எவ்வித பங்கு பாத்தியமும் இல்லை. மேற்படி பாகப்பிரிவினையில் லேட்.சின்னுசாமிக்கு 4751 சதுரடி நிலமும், 2–ம் எதிர்மனுதாரருக்கு 1040 சதுரடி நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 2012–ம் வருடம் சின்னுசாமி காலமாகிவிட்டதால் மனு 2–ம் அயிட்டச் சொத்தில் லேட்.சின்னுசாமிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 4751 சதுரடி நிலத்தில் 1–ம் கிளைம்தாரருக்கு 1/3 பாகமும், 2–ம் கிளைம்தாரருக்கு 1/3 பங்கும், 2–ம் எதிர்மனுதாரருக்கு 1/3 பங்கும் பாத்தியம் உள்ளது.

(iii) 2–ம் எதிர்மனுதாரர், 1–ம் எதிர்மனுதாரரிடம் கடன் பெற்றிருப்பதாக கிளைம்தாரர்களுக்கு பாத்திமிருப்பதாக கூறி 1–ம் அயிட்டச் சொத்துக்களையும் சேர்த்து 1–ம் எதிர்மனுதாரர் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார். 2–ம் அயிட்டச் சொத்துக்களைப் பொறுத்து சொத்து விவரம் தவறாக 10000 சதுரடி என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 1–ம் எதிர்மனுதாரரிடம், 2–ம் எதிர்மனுதாரர் கடன் பெற்றிருப்பதாக கூறும் சங்கதிக்கும், இந்த கிளைம்தாரருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. 1–ம் எதிர்மனுதாரர் துர்லாபம் அடையும் எண்ணத்தில் இந்த கிளைம்தாரர்களுக்கு பாத்தியமுள்ள சொத்துக்களையும் சேர்த்து நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார். ஆகவே, மனு 1–ம் அயிட்டச் சொத்தில் 1–ம்

கிளைம்தாரருக்கு 1/9 பங்கையும், 1–ம் கிளைம்தாரருக்கு 2–ம் அயிட்டச் சொத்தில் 4751 சதுரடியில் உள்ள 1/3 பங்கையும், அதேபோல் மனு 1–ம் அயிட்டச் சொத்தில் 2–ம் கிளைம்தாரருக்கு 4/9 பங்கையும், 2–ம் கிளைம்தாரருக்கு 2–ம் அயிட்டச் சொத்தில் குறிப்பாக 4751 சதுரடியில் உள்ள 1/3 பங்கையும் 1–ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி நிறைவேற்று மனுவிலிருந்து நீக்கரவு செய்யக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 1–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்படும் எதிருரையின் சுருக்கம்

(i) மனுதாரரின் மனு பொய், மோசம், சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல செலவுடன் தள்ளுபடியாகத்தக்கது. மனுவில் கண்டுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் இங்கு எதிருரையில் நேரடியாகவும், வெளிப்படையாகவும் ஒப்புக்கொண்ட சங்கதிகள் போக மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். கடந்த 14–06–1989–ம் தேதியன்று ஏற்பட்ட கிரைய சொத்தானது பொது குடும்ப சொத்திலிருந்து பெறப்பட்ட சொத்து என்பது உண்மையல்ல. மனுவிற்காக உருவாக்கப்பட்ட சங்கதியாகும். மனுதாரர்கள்/ கோரிக்கையாளர்கள், 2–ம் எதிர்மனுதாரரின் தாயார் மற்றும் சகோதரியாவார். 2–ம் எதிர்மனுதாரரின் தூண்டுதலால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பங்கு விகிதாசாரமானது மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல. 1–ம் மனுதாரரின் கணவரும், 2–ம் மனுதாரரின் தந்தை 2012–ம் வருடத்தில் இறந்துபோனது இந்த எதிர்மனுதாரருக்கு தெரியாது. மனுவில் மேற்படியாரின் இறந்ததேதி மற்றும் மாதத்தை குறிப்பிடப்படாமல் இருந்ததிலிருந்தே இந்த மனு காலம் கடத்துவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. 1–ம் அயிட்டச் சொத்து மனுதாரர்களின் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக கூறுவது தவறு. மேற்படி சங்கதிகளை இந்த மனுதாரர்களே நிரூபிக்கவேண்டும். மனுச் சொத்தானது கடந்த 14–05–2020–ம் தேதியில் பாகப்பிரிவினை ஏற்பட்டிருப்பதாக கூறுவது தவறு. 2–ம் அயிட்டச் சொத்தில் மனுதாரர்களுக்கு எவ்வித பங்கும் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல. இந்த மனுவானது மனுவின் நடவடிக்கைகளை காலம் கடத்துவதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

(ii) 2–ம் எதிர்மனுதாரர் தனது தேவைக்காக கடன் பெற்றுக் கொண்டு ஒரு கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்திருந்தார். மேற்படி அசல் தொகை மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்தாத காரணத்தினால் 2–ம் மனுதாரர் அ.வ.எண்.177/2004 என்ற வழக்கை நாமக்கல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய கோரி இ.ம.எண்.382/2004 என்ற மனுவின் உத்தரவின் அடிப்படையில் மனு சொத்தானது நீதிமன்றம் மூலம் ஜப்தி செய்யப்பட்டு இன்று வரையில் நிலுவையில் இருந்து வருகிறது. உண்மையில் மேற்படி சொத்தானது 2–ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 14–06–1989–ம்

தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் பெறப்பட்ட தனிப்பட்ட சொத்தாகும். மேற்படி சொத்தில் 2-ம் எதிர்மனுதாரரைத் தவிர வேறு யாருக்கும் உரிமையோ, பாத்தியதையோ கிடையாது. கடந்த 14-06-1989-ம் தேதியன்று ஒரு நல்லம்மாள் வகையறாவால் கிரையம் கொடுக்கப்பட்டு மேற்படி சொத்தானது 1366/1989 என்ற எண்ணில் குமாரபாளையம், சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 2-ம் எதிர்மனுதாரரின் தனிப்பட்ட சொத்தாகும். கடந்த 20-08-1989-ம் தேதின்று 2-ம் எதிர்மனுதாரர் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திற்கு மேற்படி சொத்தை அடைமானம் வைத்து கடன் பெற்றுள்ளார். மேற்படி சொத்து 2-ம் எதிர்மனுதாரரின் தனிப்பட்ட சொத்து என்பதினால் தான் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ரூ.50,000/-ம் கடன் கொடுத்துள்ளது. பின்னிட்டு 2-ம் எதிர்மனுதாரர் கடந்த 03-03-2004-ம் தேதியில் கடனை அடைத்து தனது சொத்தை மீட்டுள்ளார். இந்நிலையில் 2-ம் எதிர்மனுதாரர் கடந்த 26-06-2006-ம் தேதியன்று தாக்கல் செய்த அ.வ.எண்.177/2004 என்ற வழக்கின் மூலம் சொத்தை ஜப்தி செய்துள்ளார். குடும்பத்திலுள்ள தாய் மற்றும் சகோதரியை வைத்து இந்த மனு தாக்கல் செய்துள்ளதால் மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்களுக்கு இந்த எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்கின் விபரமும், அதில் ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் ஜப்தி செய்யப்பட்ட விபரமும் தற்பொழுது தாக்கல் செய்த நிறைவேற்று மனுவின் நிகழ்வுகளும் நன்கு தெரிந்திருந்தும், இம்மனுவின் இறுதி நிகழ்விற்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் இம்மனுவானது காலம் கடந்து தாக்கல் செய்துள்ளதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல.

(iii) 17-09-2016-ம் தேதியில் மனு 23-02-2017-ம் தேதியில் மனு சுமார் 5 மாதங்கள் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதிலிருந்தே மனுதாரர்கள் தூய கரங்களுடன் இந்த நீதிமன்றத்தை அணுகவில்லை. 17-03-2017-ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்ட மனு திருப்பப்பட்டதால் அதனை 14-062017-ம் தேதியில் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளார்கள். 2-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவிலிருந்து அறிவிப்பை பெற்றுக் கொண்டு சுமார் 2285 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டு காலவரையறைச் சட்டம் பிரிவு 5-ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட இ.ம.எண்.139/2014 என்ற மனுவானது தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் சென்னை உயர் நீதிமன்றத்திற்கு சீராய்வு மனு CRP No.817/2016 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்ட நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இந்த மனுவில் மனுதாரர்கள், 2-ம் எதிர்மனுதாரர் பெற்ற தீர்ப்பின் பயனை தடுக்கவேண்டி தனது தாயார் மற்றும் சகோதரியை வைத்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவுடன் தாக்கல் செய்துள்ள 05-08-2013 மற்றும் 03-03-2016-ம் தேதியிட்ட வில்லங்கச் சான்றிதழை பார்த்தாலே இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்பது தெளிவாகும். எனவே, மனு செலவு தொகையுடன் தள்ளுபடியாகத்தக்கது என்று சொல்லப்பட்டுள்ளது.

4) மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 முதல் ம.சா.3 வரையிலானவர்கள் விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) மனுதாரர்களின் மனு, எதிர்மனுதாரர்களின் பதிலுரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய சங்கதி என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதாகும்.

6) <u>தீர்வு :</u>

(i) இந்த மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 58–ன் கீழ் நிறைவேற்று மனுச் சொத்தில் உரிமை கோரியும் அந்த சொத்தினை பற்றுகை செய்வதற்கு ஆட்சேபணை தெரிவித்தும் இந்த மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள்.

(ii) மனுவில் சொல்லப்பட்டுள்ள தரப்பினர்களின் உறவுமுறை சம்மந்தமாக எவ்வித பிரச்சனையும் இல்லை. அந்தவகையில், காலம் சென்ற சின்னுசாமி மற்றும் அவரின் மனைவி 1–ம் மனுதாரர் ஆகியோர்களுக்கு பிறந்த குழந்தைகள்தான் 2–ம் மனுதாரரான மல்லிகா மற்றும் 2–ம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளியான ராஜவேலு ஆகியோர் ஆவார்கள்.

(iii) இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் ஏற்கனவே, தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யக் கோரும் மனுவான இ.ம.எண்.382/2004–ன்படி 18–03–2006–ம் தேதியில் ஜப்தி செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மொத்தம் இரண்டு அயிட்டச் சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதலாம் அயிட்டச் சொத்தானது மனுதாரர்களின் சங்கதிப்படி பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானம் மற்றும் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களின் உழைப்பிலிருந்து வந்த வருமானம் ஆகியவற்றை வைத்து கடந்த 14–06–1989–ம் தேதியிட்ட கிரையப் பத்திரப்படி 2–ம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளியான ராஜவேலு பெயரில் வாங்கப்பட்டது. அதற்கு ஆதாரமாக 2–ம் எதிர்மனுதாரர் பெயரிலுள்ள கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1–ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை பரிசீலிக்கையில், 2–ம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளி ராஜவேலு ஒரு நல்லம்மாள் வகையாறவிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். பொதுவாக, கூட்டுக் குடும்பத்தில் கூட்டுக் குடும்ப உறுப்பினராக இருந்தாலும்கூட அவர்களின் தனிப்பட்ட பெயரில் சொத்துக்களை வைத்துக் கொள்ளலாம். அது அவர்களின் தனிப்பட்ட சொத்துக்களாகும். இதுசம்மந்தமாக,

***Hindu Law Mulla***

***Edition - 21st, Page No.334***

***$$ 220- Incidents of separate of self -acquired property-***

*A Hindu, even if he be joint, may possess separate property. Such property belongs exclusively to him.*

என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே, மேற்சொன்ன ஆவணத்தின்படி மனு 1-ம் அயிட்டச் சொத்து ராஜவேலுவின் பெயரில் உள்ளதால் அது அவரின் தனிப்பட்ட சொத்தாகும். இந்த நிலையில், அது கூட்டுக் குடும்ப சொத்துதான், அந்த சொத்தானது பூர்வீகச் சொத்தின் வருமானத்தைக் கொண்டும், மற்றும் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களின் உழைப்பிலிருந்து வந்த வருமானத்தைக் கொண்டும் வாங்கப்பட்டது என்பதனை மனுதாரர்கள்தான் மெய்ப்பிக்கவேண்டும். இதுசம்மந்தமாக, கீழ்க்கண்ட முன் தீர்ப்பில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

***2023 (3) MWN (Civil) 711***

***IN THE HONOURABLE HIGH COURT OF MADRAS***

*Devaki and others*

*Vs.*

*1. Gopalakrishnan*

*2. Sridevi*

*Therefore, the ratio enunciated in those rulings would be, when a party claims that particular items of the property is Joint Family property, then the burden of proving such property is a Joint Family property is rest upon the party, who affirms it. Only after establishing such factum, and after establishing the availability of some form of nucleus and its relative value, which would become the probable nucleus to purchase such property, then only the presumption would arise to consider those properties are the Joint Family property. and the burden would shift to the party alleging self acquisition to establish affirmatively that the property was acquired without the aid of the Joint Family.*

மேற்சொன்ன முன்தீர்ப்பின்படி மனுதாரர்கள் மெய்ப்பித்துள்ளார்களா? என பரிசீலிக்கையில், முதலில், பூர்வீக சொத்திலிருந்து வருமானம் வந்தது என்று தெரிவித்துள்ளார். மனுதாரர்களின் சங்கதிப்படி பூர்வீக சொத்து என்பது மனுவில் சொல்லப்பட்ட 2-ம் அயிட்டச் சொத்தாகும். அந்த சொத்தினை பரிசீலித்தால் அது நத்தம் நிலத்தில் உள்ள வீட்டுமனைச் சொத்தாகும். அது விவசாய நிலமல்ல. எனவே, வீட்டுமனைச் சொத்தில் அதிகப்படியான வீடு இருந்தது. அந்த வீடுகள் வாடகைக்கு விடப்பட்டன. அதில் குடும்ப தேவைக்கு மேல் வருமானம் இருந்தது என்ற எந்த விவரமும் மனுவில் இல்லை. அந்த சொத்திலிருந்து

வருமானம் வந்தது என்பதற்கு ஆதாரமாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், இந்த மனுவில் குறைந்தபட்சம் பூர்வீக சொத்துக்கள் என்னென்ன சொத்துக்கள், அவை எந்தெந்த சர்வே எண்ணில் உள்ளது, அதன் விஸ்தீர்ணம் எவ்வளவு, எந்த வகையில் சின்னுசாமிக்கு பாத்தியப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. எனவே, பூர்வீகச் சொத்திலிருந்து வந்த வருமானத்தைக் கொண்டு வாங்கப்பட்டது என்ற மனுதாரரின் சங்கதி ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

(iv) இரண்டாவதாக, கூட்டுக் குடும்ப உறுப்பினர்களின் உழைப்பின் மூலம் வந்த வருமானத்தைக் கொண்டு வாங்கப்பட்டதா? என பரிசீலிக்கையில், இந்த வழக்கில் 2-ம் மனுதாரர் மல்லிகா தீர்ப்புக் கடனாளியான ராஜவேலுவின் சகோதரி ஆவார். மனு 1-ம் அயிட்டச் சொத்தினை ராஜவேலு கிரையம் பெற்ற தேதி ம.சா.ஆ.1ன்படி 16-07-1989 ஆகும். மேற்சொன்ன மல்லிகாவுக்கு திருமணம் நடைபெற்றது சம்மந்தமாக மல்லிகா அதாவது ம.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் இவ்வாறு சாட்சியமளித்துள்ளார்.

<u>26-02-2019-ம் தேதியிட்ட குறுக்கு விசாரணை பக்கம்-1</u>

*"................என்னுடன் பிறந்தவர்கள் ஒரு தம்பி மட்டும். அவர் இவ்வழக்கில் 2-ம் எதிர்மனுதாரர் ஆவார். எனக்கு திருமணம் நடந்து 30 வருடம் இருக்கும். 1985-ல் இருக்கலாம் என நினைக்கிறேன். ..........என் தகப்பனார் உயிருடன் இருந்தபோதுதான் திருமணம் செய்து வைத்தார்............"* என்று சாட்சியமளித்துள்ளார்.

மேற்சொன்ன அவரின் சாட்சியத்தின்படி 1985-ம் வருடத்திலேயே திருமணமாகி 2-ம் மனுதுாரர் அவரின் கணவர் வீட்டிற்க்கு சென்றுவிட்டார். இந்த நிலையில், எவ்வாறு அவர் கூட்டுக் குடும்பத்திற்காக வருமானம் ஈட்டிக் கொடுக்க முடியும்? எனவே, 2-ம் மனுதாரர் உழைப்பின் மூலம் வந்த வருமானம் கூட்டுக் குடும்பத்திற்கு கொடுக்கப்பட்டது என்ற சங்கதி ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

(v) அடுத்ததாக, மனுதாரர்கள் தங்கள் மனுவில், 1-ம் மனுதாரர் அதாவது சின்னுசாமியின் மனைவி பாவாயி திருமணத்திற்கு பிறகு நிரந்தர வருமானம் உள்ள ஒரு வேலைக்கு சென்றதாகவோ, அந்த வருமானம் மனு 1-ம் அயிட்டச் சொத்தை வாங்க கொடுக்கப்பட்டது என்றோ குறிப்பிட்டு மனுவில் சொல்லப்படவில்லை. 1-ம் மனுதாரரான ம.சா.1-ம் அவரின் குறுக்கு விசாரணையில் தனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. மனுவில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் தெரியாது என சாட்சியமளித்துள்ளார். இது சம்மந்தமாக அவரின்

<u>27–03–2018–ம் தேதியிட்ட குறுக்கு விசாரணை பக்கம்–1</u>

*"..........எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. மனுவில் என்ன விவரம் கண்டுள்ளது என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. கைரேகை மட்டும் வைத்தேன்....."*

என்று சாட்சியமளித்துள்ளார்.

எனவே, ம.சா.1–க்கு மனு எதற்காக போடப்பட்டது என்ற விவரம் கூட தெரியவில்லை. எனவே, சின்னுசாமியின் மனைவியான ம.சா.1–க்கு அதிகப்படியான வருமானம் இருந்தது அந்த வருமானம் மனு 1–ம் அயிட்டச் சொத்தை வாங்குவதற்கு கொடுக்கப்பட்டது என்ற சங்கதியை மனுதாரர்கள் மெய்ப்பிக்கவில்லை. மேலும், சின்னுசாமியின் மனைவியான பாவாயிக்கு திருமணத்தின் போது கொடுத்த சீர்வரிசையில் வந்த வருமானத்தைக் கொண்டு வாங்கப்பட்டது என்ற சங்கதியும் மனுவில் இல்லை. எனவே, மனு 1–ம் அயிட்டச் அயிட்டச் சொத்து வாங்கப்பட்டதில் பாவாயின் வருமானம் இருந்தது என்ற சங்கதி ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. மேலும், மனு 1–ம் அயிட்டச் சொத்து ராஜவேலுவின் தனிப்பட்ட சொத்து என்பதால்தான் அவர் அதனை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார். அந்த விவரம் 1–ம் எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் பதிலுரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமான வில்லங்கச் சான்றிதழ் மூலம் தெரிய வருகிறது. அதனை பரிசீலிக்கையில் அவர் கடந்த 20–08–1990 சென்னை தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார். எனவே, மேற்சொன்ன ஆவணத்தின் மூலம் மனு 1–ம் அயிட்டச் சொத்து ராஜவேலுவின் தனிப்பட்ட சொத்து என்பது தெரிய வருகிறது.

(vi) அடுத்ததாக, மனு 1–ம்அயிட்டச் சொத்து கூட்டுக் குடும்ப சொத்தாக இருக்கும்பட்சத்தில் அது வாங்கப்பட்ட வருடமான 1989–க்கு பிறகு சுமார் 12 வருடம் கழித்து 14–05–2001–ல் சின்னுசாமியும், அவரது மகனான ராஜவேலுவும் பூர்வீகச் சொத்தை அதாவது மனு 2–ம் அயிட்டச் சொத்தை பாகப்பிரிவினை செய்துள்ளார்கள். அந்த பாகப்பிரிவினையில் மனு 1–ம் அயிட்டச் சொத்து சேர்க்கப்படவில்லை. எனவே, இதிலிருந்தே மனு 1–ம் அயிட்டச் சொத்து ராஜவேலுவின் தனிப்பட்ட சொத்து என்பது தெரிய வருகிறது. எனவே, மேலே விவாதித்ததின் அடிப்படையில் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களின் வருமானத்தைக் கொண்டு மனு 1–ம் அயிட்டச் சொத்து வாங்கப்பட்டது என்பதை மனுதார்கள் மெய்ப்பிக்கவில்லை.

(vii) அடுத்ததாக, மனு 2–ம் அயிட்டச் சொத்து சம்மந்தமாக பரிசீலிக்கையில், மேற்படி மனுதாரரின் சங்கதிப்படி 2–ம் அயிட்டச் சொத்தானது காலம் சென்ற சின்னுசாமிக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்து என்றும், மேற்சொன்ன பாகப்பிரிவினையானது

சின்னுசாமி மற்றும் அவரின் மகனான 2–ம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளிக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை என்றும், அந்த பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் ம.சா.2–ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை பரிசீலிக்கையில், கடந்த 14–05–2021–ம் தேதியில் சின்னுசாமி மற்றும் அவரது மகனான ராஜவேலு ஆகியோர்களுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டு அந்த பாகப்பிரிவினையில் ஏ அட்டவணைச் சொத்து சின்னுசாமிக்கும், பி அட்டவணைச் சொத்து ராஜவேலுவிற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், ஏ அட்டவணைச் சொத்து 4751 சதுரடி கொண்ட மனை நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள சிமெண்ட் சீட் அட்டை வீட்டுடன் கூடிய சொத்தாகும். அந்த பாகப்பிரிவினையில் 2–ம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தானது 1040 சதுரடி அளவுள்ள காலி மனையாகும். மேற்சொன்ன வகையில் ராஜவேலுவிற்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்து அவரின் தனிப்பட்ட சொத்தாகும். எனவே, 1040 சதுரடி சொத்து ராஜவேலுவின் தனிப்பட்ட சொத்து என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(viii) அடுத்ததாக, சின்னசாமிக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் அவரின் மனைவியான 1–ம் மனுதாரர் மற்றும் குழந்தைகளான 2–ம் மனுதாரர் மற்றும் இந்த மனுவின் 2–ம் எதிர்மனுதாரரான/தீர்ப்புக் கடனாளிக்கு தலா 1/3 பாகம் உள்ளது. ஏனென்றால், தகப்பனாரின் சொத்தில் அவரின் குழந்தைகளுக்கு சொத்தினை பெற உரிமையுள்ளது. மேலும், இந்து வாரிசுரிமைச் திருத்தச் சட்டம் 2005–ன்படி பெண் மக்களும் கூட்டுப் பங்குதாரராக கருதப்படுவர். ம.சா.ஆ.2 ஆவணத்தின்படி 2–ம் எதிர்மனுதாரருக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்தின் விஸ்தீர்ணம் 1040 சதுரடி, சின்னுசாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் விஸ்தீர்ணம் 4751 சதுரடி ஆகும். எனவே, மேற்சொன்ன இரண்டையும் கூட்டினால் 5791 சதுரடிதான் சொத்தின் விஸ்தீர்ணமே உள்ளது. ஆனால், இந்த மனுவில் தாவா 2–ம் அயிட்டச் சொத்து 10000 சதுரடி என குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது. எனவே, சொத்து விவரம் தவறானதாகும். மேலும், இந்த மனுவில் 1–ம் எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் மனு 2–ம் அயிட்டச் சொத்து 10000 சதுரடி சொத்து என்பதற்கு ஆதரமாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், மனுதாரர்கள் சொத்து விவரம் தவறனாது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்ட நிலையில் சொத்து விவரம் சரியானது என்பதை நிரூபிக்கும் விதமாக, வாய்மொழி சாட்சியங்களையும் மனுதாரர் தரப்பில் முன் வைக்கப்படவில்லை. எனவே, மனு 2–ம் அயிட்டச் சொத்தில் ராஜவேலுவிற்கு பாத்தியப்பட்ட சொத்தானது அவருக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட 1040 சதுரடி மற்றும் அவரின் தகப்பனார் சின்னுசாமிக்கு ஒதுக்கப்பட்ட 4751 சதுரடியில் 1/3 பாகம் உரிமை மட்டுமே உள்ளது. அந்த சொத்துக்கள் மட்டுமே ராஜவேலுவிற்கு பாத்தியப்பட்டதாகும். எனவே, சின்னசாமிக்கு ஒதுக்கப்பட்ட பாகமான

4751 சதுரடி சொத்தில் இந்த மனுதாரர்களான பாவாயி மற்றும் மல்லிகாவிற்கு தலா 1/3 பாகம் உரிமையுள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(ix) மேலே விவாதித்த்த சங்கதிகளின்அடிப்படையில் மனு 1-ம் அயிட்டச் சொத்து ராஜவேலுவின் தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் பாகம் கோர இந்த மனுதாரர்களுக்கு உரிமையில்லை. எனவே, அந்த சொத்தைப் பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மனு 2-ம் அயிட்டச் சொத்தில் ம.சா.ஆ.2 ஆவணத்தின்படி ராஜவேலுவுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தான 1040 சதுரடி ராஜவேலுவின் தனிப்பட்ட சொத்தாகும். மேற்சொன்ன ம.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணத்தில் சின்னுசாமிக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் அதாவது 4751 சதுரடியில் இந்த மனுதாரர்களுக்கு தலா 1/3 பாகம் உள்ளது என தீர்மானித்து இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக, இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர் 2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 21-ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

D MOHANKUMAR

Digitally signed by D MOHANKUMAR
Date: 2024.03.21 18:32:27 +0530

சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

1) மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்

1. ம.சா.1 – பாவாயி
2. ம.சா.2 – மல்லிகா
3. ம.சா.3 – கோபால்

2) மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | 14-06-1989 | கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் |
| 2. | ம.சா.ஆ.2 | 14-05-2001 | பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் |

3) எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்–இல்லை

D MOHANKUMAR

Digitally signed by D MOHANKUMAR
Date: 2024.03.21 18:32:42 +0530

சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

சார்பு நீதிமன்றம்
திருச்செங்கோடு
அசல்/வரைவு/உத்தரவு
EP No.189/2017 in
REP No.36 of 2013
OS No.195/2008
நாள்.21-03-2024.